# யாழ். நகரில் 24 மணிநேரத்தில் 5½ அங்குல மழை!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 281
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சார்த்திகை 5 ரமழான் 20 வெள்ளிக்கிழமை (20-11-70)

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 7-50 |
| ஒரு வருடம் | ரூ 82-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## கள்ளக் குடியேற்றம், கடத்தலைத் தடுக்க

# வடக்கு கிழக்கில் ராணுவம் தீவிரமாக பயன்படுத்தப்படும்

## ஆட்சிமன்றத்தில் அறிவிப்பு

கோட்டை வியாழன்

**கஷ்டங்கள் எதுவாய் இருந்தாலும் கள்ளக்கடத்தலையும், கள்ளக்குடியேற்றத்தையும் தடுத்துநிறுத்துவதற்கு ராணுவத்தைதீவிரமாகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது.**

இவ்வாறு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசி திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

வடக்குப்பகுதியிலும் கிழக்குப்பகுதியிலும் கள்ளக்கடத்தல்களும் கள்ளக்குடியேற்றமும் நடைபெறுவதைத் தடுக்க முப்படைகளின் உதவியுடன் விரிவான திட்ட... ஜயக்கொடி, இப்பகுதிகளில் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருக்கும் பலம் வாய்ந்த சிலகோஷ்டிகள் ராணுவத்தை இப்பகுதியிலிருந்து வாபஸ்பெறச் செய்வதற்கா[...] வேண்டுமென்றே மோ[...]தல்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தபோது ... வீரர்களால் பயமுறுத்தப்பட்ட சம்பவம்குறித்துபிரஸ்தாபிக்கையில் மேற்படிதகவல்களை உதவியமைச்சர் வெளியிட்டார்.

முப்படைகளும் இப்போதைய சூழ்நிலைக்கேற்ப திருத்தியமைக்கப்படுமென்றும் கள்ளக்கடத்தலையும், கள்ளக்குடியேற்றத்தையும் தடுக்க ராணுவத்துடன் சேர்ந்து விரிவான திட்...

## மாங்குளத்தில் ரயில் தடம்புரண்டது

# தீவுப்பகுதி பஸ்சேவை ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று முன்தினம் தொடக்கம் பலத்த மழைபெய்து கொண்டிருக்கிறது. வீதிகள் எங்கும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன; நேற்று முன்தினம் 24 மணி நேரத்தில் மட்டும் ஐந்தரை அங்குலம்வரை மழை பெய்துள்ளது. கடந்த வருடத்தில் கூட ஒரே தினத்தில் இவ்வளவு மழை பெய்யவில்லையெனப் புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது.

பண்ணைப் பாலத்துக்கு மேல் ஒன்றரை அடிவரை வெள்ளம் பாய்வதால் தீவுப் பகுதி பஸ்சேவை நடைபெறவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும்பஸ் பண்ணைப்பாலத்தின் ஒரு எல்லையில் நின்றுவிடுகிறது. பிரயாணிகள் பஸ்சிலிருந்து இறங்கி வெள்ளம் பாயும் இடத்தை நடந்து சென்று மறுகரையில் நிற்கும் பஸ்சில் ஏறிப் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

வெள்ளம் பாலத்தின்மேல் பாய்வதால் பஸ்களை நேரடியாகச் செலுத்திச் செல்ல முடியாதென இ. போ. ச. சாரதிகள் முறையிட்டதைத் தொடர்ந்து பஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஸ்தலத்துக்கு விரைந்து சென்று நிலைமையைப் பார்வையிட்டார். அதன்பின்னர் இரு கரைகளுக்கும் பஸ் சேவைகளை நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணப் பகுதியில் பல இடங்களில் தந்திச் சேவையும் ஸ்தம்பித்துள்ளது.

நாவற்குழி தனங்கிளப்புப் பகுதியிலுள்ள வயல்களில் கடல்நீர் புகுந்து விடுமோ என அஞ்சப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் வயல்களுக்கு அணைபோடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

மழைதொடர்ந்து பெய்வதால் கடல் கொந்தளிப்பாயிருப்பதாகவும் தீவுப்பகுதி பிரயாண சேவையில் ஈடுபடும் மோட்டார் வள்ளங்கள் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் ஊர்காவற்றுறைப் பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அளவுக்கு அதிகமாக பிரயாணிகளை வள்ளங்களில் ஏற்றிச்செல்ல வேண்டாம் என்று சுங்கப் பகுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

### ரயில் தடம்புரண்டது

கொழும்பு - யாழ்ப்பாணம் தபால் ரயில் நேற்று 6 மணிநேரம்தாமதித்து வந்தது. மாங்குளத்துக்கு அண்மையில் சரக்கு வண்டிஒன்று தடம்புரண்டதால் தபால் ரயில் தாமதிக்க வேண்டி ஏற்பட்டது.

ரயில்பாதை சீராக்கப்பட்டு தற்போது சேவை வழமைபோல் நடைபெறுகிறது.

### தொடர்ந்து மழைபெய்யும்

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று உரிய காலத்தில் வீசத் தவறிவிட்டதென்றும் இதனுல் மழை தொடர்ந்து பெய்யலாம் என்றும் வானநிலை அவதான நிலையம் நேற்று அறிவித்தது. எந்த நேரத்திலும் இக்காற்று வீசலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### மோசமான காலநிலை

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று பகல் 12 மணிவரை மோசமான காலநிலையும் கடல் கொந்தளிப்பும் மழையும் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

**கூரையைப் பிரித்து இறங்கி**

## விபத்துக்குள்ளானவர் ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரியில் கடையொன்றுக்குள் கூரையைப் பிரித்துக்கொண்டு இறங்கி, வெடிவிபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் மரணமானுர்.

ஹக்மனையைச் சேர்ந்த காமினி எதிரிசிங்க என்ற மேற்படிநபரின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். ராசநாயகம் நேற்று விசாரணை நடத்தினுர்.

காலம் சென்றவர் கடையிலுள்ள இரும்புப்பெட்டியை உடைப்பதற்குத் தேவையான குறடுகள், கத்தி போன்றவற்றைக் கொண்டு வந்தாரென்றும் இருளாய் இருந்தபடியால் வெளிச்சத்திற்காக தீக் குச்சியைக் கொளுத்தியபோது வெடிமருந்துகளில் தீப்பற்றிவெடி விபத்து ஏற்பட்டதாகவும் மரணவிசாரணையில் தெரிய வந்தது.

விபத்தினுல் ஏற்பட்ட மரணமென மரணவிசா...

**மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு**

# 'விடத்தல்தீவு ஜும்மா பள்ளி பற்றி சாட்சியங்கள் இல்லை'

## திருச்செல்வம் கியூ. ஸி. தொகுப்புரை

யாழ்ப்பாணம், வெள்ளி

தேர்தல் ஆட்சேப மனுவில் தாரா குண்டு ஜும்மா பள்ளிவாசல் பற்றியும் விடத்தல்திவு ஜும்மா பள்ளிவாசல் பற்றியும் சாட்சியங்கள் அளிக்கப்படவில்லை. ஆதலாம் அந்தக் குற்றச்சாட்டு தோற்றுவிட்டது."

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் தொகுவ... டர் பற்றி சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அடுத்த கூட்டத்தில் அது அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக வேறொரு தீர்மானத்தை நிறைவேற்றி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி நபரின் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். ராசநாயகம் நேற்று விசாரணை நடத்தினார்.

பிரஸ்தாப கடையில் வேலை செய்பவரான காஸிம் அப்துல் கபூர் என்பவர் சாட்சியமளிக்கயில் தாம் சம்பந்தப்பட்ட கடையில் விற்பனையாளராகக் கடமையாற்றுவதாகவும் அருகிலுள்ள கடையின் அறையொன்றில் தங்குவதாகவும், சம்பவ தினம் இரவு சாப்பிட்டபின் 9 மணியளவில் படுக்கச் சென்றதாகவும் அதிகாலை 4 மணியளவில் வெடிச்சத்தம் ஒன்று கேட்டதாகவும் தெரிவித்தார். வெடிச்சத்தத்தை தொடர்ந்து வெளியே சென்றுபார்த்த பொழுது கடையின் முன் 10 அல்லது 15 பேர் நின்று கொண்டிருந்தார்கள். சிலர் காலமானவரைப் பிடித்து வைத்திருந்தார்கள். அவர் உடம்பெல்லாம் எரிகாயங்கள் காணப்பட்டன. அந்த வழியாக ரோந்து சென்ற பொலிசாரிடம் அறிவிக்கப்பட்டு. அவர்கள் காலஞ்சென்றவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர் இவ்வாறு கபூர் மேலும் தெரிவித்தார்.

விபத்து ஏற்பட்டதாகவும் மரணவிசாரணையில் தெரிய வந்தது.

விபத்தினால் ஏற்பட்ட மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

— —

## முன்னாள் அமைச்சர் காலமானார்

கடுகண்ணவ, வியாழன்

முன்னாள் தபால் தகவல் அறிவிப்பு அமைச்சர் திரு. சி. ஏ. எஸ். மரைக்கார் நேற்றுமுன்தினம் காலமாகிவிட்டார். இவர் 1956-ல் பண்டாரநாயகா அரசாங்கத்தில் அமைச்சராகவும் கடுகண்ணவை ஆட்சி மன்ற உறுப்பினராகவும் இருந்தார் இவருக்கு வயது 59. நேற்று இவரது கடுகண்ணவ இல்லத்தில் ஈமச்சடங்குகள் நடைபெற்றன.

## பதில் நீதிபதி

யாழ்ப்பாணம், வெள்ளி

முடிக்குரிய புறக்டர் திரு எஸ். கனகரத்தினம் நேற்றும் இன்றும் யாழ்ப்பாண நீதிபதியாகக் கடமையாற்றுகிறார்.


புதுவருடத்துக்கான மிகச் சிறந்த கலண்டர்

# ஆனந்தா
திருக்குறட்
# கலண்டர்

- யாழ்ப்பாணம் பிரம்ம ஸ்ரீ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதப்படியமைந்த நாள், திதி, யோகம், நட்சத்திரம், ராகுகாலம், சுபநேரம், கோயில் உற்சவ தினங்கள் முதலியன......
- இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் பெருநாள்கள்......
- பெரியார் நினைவுதினங்கள் (படங்களுடன்)...
- பேரயா, மற்றும் அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறைகள்......
- தினந்தோறும் திருக்குறளும் பொழிப்புரையும்
- மற்றும் ஒரு சிறந்த கலண்டரில் நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய எல்லா அம்சங்களும்!

பெரிய அளவில் சிவப்பு மையினால் கவர்ச்சிகரமாக அச்சிடப்பெற்று வண்ண வண்ணப் படங்களுடன் விற்பனையாகின்றது!

உங்கள் ஊர் வர்த்தகரிடம் "ஆனந்தா திருக்குறட் கலண்டர்" என்று வற்புறுத்திக் கேளுங்கள், புதுவருடத்தின் சிறந்த கலண்டரை!

தயாரிப்பாளர்!

ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 348 தந்தி: 'அச்சகம்'


குப்பகுதியிலும் கள்ளக்கடத்தல்களும் கள்ளக்குடியேற்றமும் நடைபெறுவதைத் தடுக்க முப்படைகளின் உதவியுடன் விரிவான திட்டமொன்றை அரசு நிறுவிருப்பதாகத் தெரிவித்த திரு

மோதல்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவியாக இருந்தபோது இப்போதைய பிரதமமந்திரி திருமதிசிறிமா பண்டாரநாயக்கா சில ராணுவ

கேற்ப திருத்தியமைக்கப்படுமென்றும் கள்ளக்கடத்தலையும், கள்ளக்குடியேற்றத்தையும் தடுக்க ராணுவத்துடன் சேர்ந்து விரிவான திட்டம் ஒன்று தீட்டப்படுவதாகவும் திரு. லக்ஷ்மன் ...க்கொடி தெரிவித்தார்.

தேர்தல் ஆட்சேப மனுவில் தாரா குண்டு ஜும்மா பள்ளிவாசல் பற்றியும் விடத்தல்தீவு ஜும்மா பள்ளிவாசல் பற்றியும் கூறப்பட்ட சம்பவத்தில விடத்தல்தீவு பள்ளி பற்றி

கி. பாகிஸ்தானுக்கு

## ஒரு கோடி ரூபா இந்தியா நன்கொடை

புதுடில்லி, நவ.19

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட சூறாவளி கடல் எழுச்சி ஆகிய இயற்கை அழிவுகளுக்காக 1 கோடி ரூபா உதவியளிக்க இந்தியா முடிவு செய்திருக்கின்றது ஏற்கனவே பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி 5 லட்சம் ரூபாம் நன்கொடையளித்திருக்கிறார்.

# கீனுகொல்லை சம்பவம்பற்றி ஆராய விசாரணைக் குழு

## பிரதமமந்திரி அறிவிப்பு

கொழும்பு வியாழன்

பொலிஸ்பாதுகாப்பிலிருக்கும்போது மரணமான தொம்பே முதலாளி, கோர்ப்ரல் திலகரத்தின ஆகியவர்களின் மரணங்களுக்கான சூழ்நிலைகள்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்படும்.

கிளுகொல்லை தோட்டத்தில் பொலிசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு தொழிலாளர்கள் மரணமான சூழ்நிலைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படும்.

பிரதம மந்திரி திருமதி சிறிமா வோ பண்டாரநாயகா இந்த வாக்குறுதிகளை இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

பொலிஸ் இலாகாவுக்கான மான்யப் பிரேரணைகளின் மீதுநடைபெற்ற விவாதங்களுக்கு பிரதமமந்திரி பதிலளித்துப் பேசினார்

தொம்பே முதலாளி என்பவரும் கோர்ப்ரல்திலகரத்ன என்பவரும் யு.என்.பி. யின் ஆட்சியின்போது கொழும்பில் பொலிஸ் பாதுகாப்பில் இருந்தபோது மரணமானார்கள்.

கிளுகொலை தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற வேலைநிறுத்தம் ஒன்றின் போது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்த போது இரு தோட்டத் தொழிலாளர்கள் மரணமானார்கள். இத்தோட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் விசாரணைசெய்துஅறிக்கைசமர்ப்பிக்க ஆணைக்குழு நியமிப்பதாக பிரதமமந்திரி ஆட்சி மன்றத்தில் வாக்களித்தார்.

இச்சம்பவத்திற்கு பொலிசாரை மாத்திரம் குறைகூறஇயலாது. ஆனால்பொலிசார் விடும் தவறுகளுக்காக அவர்களைக் கண்டிக்காமலிருக்கப்போவதில்லை என்றார் பிரதமர்.

— —

## கர்ப்பிணி கோரக்கொலை

சில்லாலை, வியாழன்

நிறைமாதக் கர்ப்பிணிலொருவர் கழுத்துவெட்டப்பட்ட நிலையில் இறந்து கிடந்தார். இக்கோரசம்பவம் காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதியில் வலித்தூண்டல் என்ற இடத்தில் சென்ற செவ்வாய்க்கிழமை அதிகாலை நடந்திருக்கிறது.

வலித்தூண்டலிலுள்ள அர்ச் அன்னம்மாள் தேவாலயத்தின் முன்கொலையுண்டு கிடந்த பெண் அந்தோனிப்பிள்ளை என்பவரின் மனைவியான தங்கம்மா என்று அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

கொலைக்கு உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஆயுதங்கள் சிலவும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின்பேரில் மூவரைக் கைதுசெய்துமுள்ளனர்.

— —

## செங்குந்த அதிபர் காலமானார்

யாழ்ப்பாணம், வெள்ளி

செங்குந்த இந்துக்கல்லூரி அதிபர் எஸ்.பி. நடராசா நேற்று மாரடைப்பால் காலமானார். இவர் கடந்த மூன்று வருடங்களாக செங்குந்தா இந்துக்கல்லூரியிலும், அதற்கு முன்பு சேணியதெரு மகாவித்தியாலயத்திலும் அதிபராகக் கடமையாற்றினார். இவர் வடமாகாண ஆசிரியர் சங்கம் தேசிய ஆசிரியர்சங்கம் ஆகியவற்றின்முன்னாள் தலைவருமாவார்.

# இந்து மகாசமுத்திரத்தில் வல்லரசுப் படைத் தளம்

## பாரதம் கவலை

புதுடில்லி, நவ.19

இந்துமா சமுத்திரத்தில் வெளிவல்லரசுகள் கடற்படைத் தளங்களை அமைக்க முயற்சிகளெடுப்பதுகுறித்து பாரத அரசுபெரிதும் கவலை கொண்டுள்ளது இப்பிரதேசம் அமைதிப்பிரதேசமாகவே இருக்கவேண்டுமென இந்தியா விரும்புகிறது. கடற்படைத் தளங்கள் ஏற்பட்டால் இப்பிரதேசத்தில் மாவல்லரசுகளின் போட்டி ஏற்பட்டு. இங்கும் பதற்ற நிலைமை உருவாகி அமைதி குறைந்துவிடும் என்று இந்தியா கருதுகிறது.

நேற்று இந்தியலோகசபையில் இதுசம்பந்தமாக ஏற்பட்ட விவாதத்தின்போது வெளியுறவு அமைச்சர் சர்தார்சுவர்ண்சிங் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

இந்துமாகடல்ப் பிரதேசம் அமைதிப்பிரதேசமாக விளங்கவேண்டுமென்று லுசாக்காவில்நடைபெற்ற மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதையும் சுவர்ண் சிங் சுட்டிக்காட்டினார்.

# 'தமிழ் மாணவர்கள் தவறாது வந்து சேர்ந்துவிட வேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

பல்கலைக்கழகத்தில் பயில்வதற்கு அனுமதி கிடைத்த தமிழ்மாணவர்கள் எல்லோரும் தவறாது வந்து பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொள்ளுமாறு பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

தமிழ் மாணவர்களுக்கு விகிதாசார ரீதியில் தனிப்பட்ட புள்ளிகளை நிர்ணயித்து இம்முறை பல்கலைக்கழகத்தில் அனுமதிவழங்கப்பட்டிருக்கிறது.

எனவே தமிழ் மாணவர்கள் எப்பகுதிக்கு அனுமதி பெற்றிருந்தாலும் தவறாது பல்கலைக்கழகத்தில் வந்து சேருமாறு தமிழ்ப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஆலோசனை கூறியிருக்கின்றனர்

பல்கலைக்கழகத்திற்கு அனுமதிகிடைத்தகுறிப்பாக விஞ்ஞானம், விவசாயம், மிருகவைத்தியம் போன்ற பிரிவுகளுக்கு அனுமதிகிடைத்த மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கும்படி அவர்களின் பெற்றோர்களையும் பேராசிரியர்கள் கேட்டுள்ளனர். குவிமா

— —

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். வைத்தீஸ்வர வித்தியாசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள் சங்க வருடாந்த விழா இன்று பிற்பகல் நடைபெறும்,

வடமாநிலக் கல்வியதிபர் திரு. வி. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்,

குற்றச்சாட்டு தோற்றுவிட்டது."

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் தொகுப்புரை நிகழ்த்திய முதலாவது எதிர்மனுதார் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். திருச்செல்வம் கியூ. ஸி. மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வின்சென்ற் தாமோதரம் முன்னிலையில் தொகுப்புரை நேற்று ஆரம்பமானது.

குற்றச்சாட்டுகள் தெளிவாக நிரூபிக்க வேண்டுமென்று கூறிய திருச்செல்வம் வழக்குகளின் பல தீர்ப்பை ஆதாரம்காட்டிவாதாடினார்

திரு. திருச்செல்வம் தமது தொகுப்புரையில் மேலும் கூறியதாவது:

"மனுதார் தமது மனுவில் வாக்குச்சீட்டுகள் திருப்பி எண்ணப்பட வேண்டுமென்று கோரியிருந்தார். அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. 4-வது எதிர் மனுதார் மரைக்கார் பருத்தித்துறையிலுள்ள அச்சகத்தில் நோட்டீஸ் அச்சிட்டு வெளியிட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக அச்சுக்கூட உரிமையாளர் சாட்சியப் பட்டியலில் போடப்பட்டிருந்ததும் இங்கு சாட்சியமளிக்கவில்லை. ஆதலால் அந்தக் குற்றச்சாட்டும் தோற்றுவிட்டது.

நோட்டீஸ் விநியோகம் பற்றி 1-ம், 2-ம், 3-ம் குற்றச்சாட்டுகளுக்கு சாட்சியங்கள் எதுவுமில்லை. இவ்வழக்கு சம்பந்தப்பட்ட எச்சம்பவமும் பொலிசில் முறைப்பாடு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மன்னாரில் தியேட்டர் குத்தகைக்கு கொடுக்கப்பட்டது குறித்து மனுதாரைக் கேட்டபோது கறுப்பையாவுக்கு குத்தகை கொடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். பின்னர் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட தொகை கூறப்பட்டது. மனுதார் 1964-ம் ஆண்டு முதல் பட்டினசபைத் தலைவராக இருந்தும் அவருக்கு ரெண்டர் பற்றிய அறிக்கையிலுள்ள விபரங்கள் குறித்து தெரியாதென தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை உள்ளூராட்சி ஆணையாளரினால் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பப்பட்டது. தியேட்டர் மானம் கொண்டுவரப்பட்டது, அடுத்த கூட்டத்தில் அது அங்கீகரிக்கப்படுவதற்குப் பதிலாக வேறொரு தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இவ்விஷயத்தில்உபவிதிகள் அனுசரிக்கப்படாததோடு 'ரெண்டர்'ரும் கோரப்படவில்லை.

மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினராக திரு வி ஏ அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மன்னாரில் யு என் பி சார்பில் போட்டியிட்ட திரு ரஹீமினால் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணை செய்யப்பட்டு வருகிறது

மனுதார் சார்பில் அட்வக்கேட் இஸ்ஸடீன் முகமட் கியூ சி, அட்வக்கேட் குறசெற் தம்பையா, அட்வக்கேட் சாஹீட் ஆகியோரின் உதவியுடனும் புரக்டர் சாஹீட்டின் அனுசரணையுடன் ஆஜரானார்

எதிர்மனுதார் சார்பில் அட்வக்கேட் எஸ். திருச்செல்வம் கியூ ஸி, அட்வக்கேட் எச் வி தம்பையா, அட்வக்கேட் எஸ். சிவானந்தன் அட்வக்கேட் எம். ஆலாலசுந்தரம்ஆகியோரின் உதவியுடனும் புரக்டர்பால சுப்பிரமணியத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார்

இன்று காலை தொடர்ந்து திரு திருச்செல்வம் தொகுப்புரை நிகழ்த்துவார்

— —

## கடற்படை வள்ளம் புயலில் சிக்கியது

யாழ்ப்பாணம், வெள்ளி

கள்ளக்கடத்தல்காரர்களை தடுக்குமுகமாக கடலில் ரோந்து சுற்றிச் சென்ற ஊர்காவற்றுறை சுங்கப் படகொன்று கடல் அலைக் கொந்தளிப்பினால் வீசப்பட்டதால் சுங்கப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

— —

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

இசை அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் யாழ். கில்னர் மண்டபத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த அருணகிரிநாதர்விழா மழை காரணமாக பின்போடப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

தையல் வேலையில் தேர்ச்சியுடையவர்கள் வேலைக்கு விண்ணப்பிக்கவும். கபிறி காமன்ஸ், 41 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2523

க. பொ. த. ஆங்கிலத்துடன் சித்திபெய்தி கணக்கியல் பயிற்சியும் அநுபவமும் பணப் பிணையும் கொடுக்கக்கூடிய கசியர்-கிளாக் தேவை. காலை 10—12 மணிக்கு நேரிற் சந்திக்குக. சுந்தரம் புத்தகசாலை, அச்சுவேலி. 2521

### விற்பனைக்கு

கொழும்புத்துறை:- ஆரியர் வீதி, 2 1/2 பரப்புக் காணியில் பெரிய கல் வீடு, கிணறு, கராச், மின்சாரம், சுற்றுமதில், நல்ல தண்ணீர் ரோட் அருகில். லான்ட் இன் வெஸ்ற்மென்ற்ஸ், 6, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2514

நாவற்குளி புகையிரத நிலையத்திற்கு எதிரில் கட்டடத்துக்கான பத்துப் பரப்பு நிலம். த லான்ட் இன் வெஸ்ற்மென்ற்ஸ், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 2522

## டிச. 6-ம் திகதி நேர்முகப்பரீட்சை

உடுப்பிட்டி, வியாழன்

பொதுச் சௌக்கியப் பரிசோதகர் பதவிக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன, எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அடுத்த மாதம் 6-ம் திகதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

### பரீட்சை

உடுப்பிட்டி, வியாழன்

இலங்கை மக்கள் வங்கியில் சிறுப்ப , லிகிதர் பதவிகளுக்கான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் 21-ம் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகளிர் கல்லூரியாக்க ஆட்சேபம்

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி திரு இருதயக் கல்லூரியை மகளிர்கல்லூரியாக்குவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்குக் கரவை கத்தோலிக்க வாலிபர் கழகம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள ஒரேயொரு கத்தோலிக்கக்கல்லூரி இதுவேயென்றும், இக்கல்லூரியில் மாணவர்களும் மாணவிகளும் படிக்க வாய்ப்பிருக்க வேண்டுமென்றும், வேறு வசதியான பாடசாலையை மகளிர் கல்லூரியாக மாற்றும்படியும், இக்கல்லூரியை மகளிர் கல்லூரியாக்கும் முயற்சிகளைக் கைவிடும்படியும் கரவைக் கத்தோலிக்க வாலிபர் கழகம் கல்வியமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளது.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன்·புஷ்பலதா சோ—மனோரமா நடித்த

செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா—அசோகன் நடித்த

மாட்டுக்கார வேலன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30 , 10-00

போயா நாட்கள் 10-30 மெற்னி


## யாழ். மாநகர சபை கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு யாழ். மாநகர சபையில் கட்டிட ஒப்பந்தக்காரராகப் பதிவுசெய்துள்ளவர்களிடமிருந்து 30-11-70 நண்பகல் 12-00 மணிவரை கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) இலந்தைக் குளம் வாய்க்கால் அணைச்சுவர் கட்டல்.

(2) காதி அபூபக்கர் ரோட் வடிகால் அமைத்தல்,

(3) கொண்டலடி வீதி அணைச்சுவர் கட்டல்.

(4) கொய்யாத்தோட்டம் வீதி வடிகால் அமைத்தல்,

கேள்விக்காரர் அனைவரும் கேள்விகள் திறக்கப்படும் 30-11-70 பி. ப. 3-30 மணிக்கு எனது அலுவலகத்தில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ். மாநகர சபை மராமத்துப் பொறியியலாளரிடம் 25-11-70 நண்பகல் 12-00 மணிவரை ரூபா 5/- ஒவ்வொரு வேலைக்கும் படிவப்பெறுமதியாகவும் ரூபா 25/- ஒவ்வொரு வேலைக்கும் கேள்வி வைப்புப்பணமாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப்பணம் மாத்திரம் திருப்பிக்கொடுக்கப்படும்.

எல்லாக் கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டு இணைப்பிரதிகளுடன் கூடியதாக இருத்தல்வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் என்ன வேலைக்கென்று எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி சுந்தரம்,
மாநகர சபை,
ஆணையாளர்.

மாநகரசபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15-11-70 2560

## "இடமாற்றத்தை ரத்துச்செய்க"

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியான திரு. பஞ்சலிங்கத்தின் இடமாற்றத்தை

கரைச்சி கி. ச. தேர்தல்

## 21 வட்டாரங்களுக்கும் நியமனப்பத்திரம் தாக்கல்

கிளிநொச்சி, வியாழன்

கரைச்சிக் கிராமசபைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் நேற்று முன்தினம் தமது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். சபையின் 21 வட்டாரங்களில் 8-ம் வட்டாரத்திற்கு திரு. கு. ஐயம்பிள்ளை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். மற்றெல்லா வட்டாரங்களிலும் தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ்கட்சி சார்பிலும் சுயேச்சையாகவும பலர் போட்டியிடுகின்றனர். அபேட்சகர்கள் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்- சி சின்னராசா, மா. பற்றிக் (த.அ.), செ சந்திரலிங்கம், வி. வி. ஞானசங்கரி த. கா.)

2-ம் வட்டாரம்-சி பொன்னுத்துரை, மு கந்தையா (த. அ.), எஸ் இ எம் ஜெசவுந்தரராஜா.

3-ம் வட்டாரம்- கா மார்கண்டு, நா குமாரசாமி (த அ), க விஸ்வலிங்கம்.

4-ம் வட்டாரம்- கா செல்லையா (த அ), சி செல்லையா, செ சிவசம்பு.

5-ம் வட்டாரம்- இ வேலுப்பிள்ளை (த அ), மு பேரம்பலம், க வீரசிங்கம்.

6-ம் வட்டாாம்- ப முத்துலிங்கம் (த அ), த செல்லத்துரை (முன்னாள் கி ச தலைவர்)

7-ம் வட்டாரம்- ச கனகசபை, சி கயிலாயபிள்ளை, இ சண்முகலிங்கம் (த அ)

8-ம் வட்டாரம்- கு ஐயம்பிள்ளை (போட்டியில்லை)

9-ம் வட்டாரம்— வ சரவணமுத்து, வ சுப்பையா.

10ம் வட்டாரம்- க சுப்பிரமணியம், சு யோசப், கா. விநாயகமூர்த்தி (த அ), சி. கணேஷ், சி தங்கராசா, சி காராளசிங்கம்.

11ம் வட்டாரம்- ச கந்தையா, வே சபாபதிப்பிள்ளை (த அ), பொ வேலாயுதபிள்ளை, வை பரராசசிங்கம்.

12ம் வட்டாரம்- க நாகலிங்கம், சி சிதம்பரநாதர்.

13ம் வட்டாரம்- அ முருகேசு, து இரங்கையா, எஸ் புஷ்பராசா, எம் செல்வரத்தினம் (த அ), க சோமசுந்தரம்.

14ம்வட்டாரம்- நா ஆனந்தநடராசா (த அ), சி சிதம்பரப்பிள்ளை.

15ம் வட்டாரம்-செ சதாசிவம், த நடராஜா.

16ம் வட்டாரம்- வே. தேவராஜா. த பேராயிரசிங்கம் (த அ).

17ம் வட்டாரம்- பொ. அப்புத்துரை, ச யோன்ராஜா (த அ), ஆர் கந்தசாமி.

18ம் வட்டாரம்-சி தில்லையம்பலநாதன், ஆ வேலுப்பிள்ளை (த அ), ஆர் குணரத்தினம்.

19ம் வட்டாரம்- ஏ குலராஜா, செ கந்தசாமி (த அ), எம் ஏ ஞானப்பிரகாசம்.

20ம் வட்டாரம்: ஆ. குலசேகரம் (த.அ.), சி. ஜமால்தீன், த. சற்குணநாதன் (த. கா.)

21ம் வட்டாரம்: சி. மகாலிங்கம் (த அ), வி. கந்தையா

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 20—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம். 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 பஜனை, 7-00 நாட்டுப் பாடல்கள், 7-15 வயலின், 8-20 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம் 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

## "நாவலர் உபதேசப்படி வாழ்வது கடமை'

யாழ்ப்பாணம், வெள்ளி

''நாவலர் பெருமான் சைவக்கிரிகைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று நம்சமூகத்திற்கு கூறியுள்ளார். அவரது உபதேசங்களை பின்பற்றி வாழ்வது நம்கடமையாகும்''

இவ்வாறு வவனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் நினைவுவிழாவுக்குத் தலைமை வகித்த திரு. வீ. பாலசுப்பிரமணியம் பேசும்போது தெரிவித்தார்.

திருவாளர்கள் நா. சோமகாந்தன், ஐ கி. சம்பந்தன், வித்துவான் எம். சபாரத்தினம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்தினர்.

வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க ஆதரவில் நாவலர் வாரம் 4 நாள் நடைபெற்றது.

நாவலர் நூற்காட்சியும் மாணவர் கருத்தரங்கமும் நடைபெற்றது.

கு. வி. ம.

## ச. ச. நிலைய புதிய உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் றெக்கிளமேசன் புனித ஆரோக்கியநாதர் சனசமூக நிலைய ஆண்டு நிறைவுக் கூட்டம் திரு. கே. மனுவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வி ஞானப்பிரகாசம். இணைச்செயலாளர்கள் இ றேடா, வி. எம். ஜெருட், பொருளாளர் எம் ஜே ராஜேந்திரம், நாடக மன்றச் செயலாளர் வி மரியதாஸ்

## பனங்கிரையைச் சாப்பிட்ட ஐவர் ஆஸ்பத்திரியில்

முல்லைத்தீவு, வியாழன்

பனங்கிரையைச் சமைத்து உண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் அபாயகரமான நிலையில் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேவிபுரம் தென்னைப் பயிர் செய்யும் காணியில் குடியிருக்கும் எஸ் அருணாசலமும், மனைவி, பிள்ளைகளும் கடந்த சில தினங்களாக இவர்கள் குடியிருக்கும் காணியில் காணப்பட்ட பனங்கிரையைப் பிடுங்கிச் சமைத்து உண்டனராம்

நேற்று முன்தினமிரவு போசனத்தை முடித்துக் கொண்டு படுத்துறங்கிய இக்குடும்பம் விடிந்து படுக்கையிலிருந்து எழும்பவில்லை என்பதைக் கண்டுகொண்ட அயலவர்கள். இவர்களை முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அனுமதித்தனர்.

தச்சுத்தொழில்

## பயிற்சிநிலையம் அமைத்துத் தருக

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவுக்கு ஒரு தச்சுத் தொழிற் பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறு புங்குடுதீவுக் கிராம சபைத் தலைவர் திரு. கா மதியாபரணம் தொழில் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

## வண்ணை நாவலர் பாடசாலையில் நாவலர் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 22-ந் திகதி காலை நாவலர் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு வடமாநில வித்தியாதிபதி திரு. வ சங்கரலிங்கம் தலைமைவகிப்பார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் பலர் உரைநிகழ்த்துவார்கள். மாணவர்களின் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிப் பேச்சுகளும் இடம்பெறவுள்ளன. வியாகரண சிரோன்மணி பிரமஸ்ரீ சிதாராம சாஸ்திரிகளின் வேதமங்களப்பாட நிகழ்ச்சியும் நடைபெறும்

21-ம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு நாவலர் குரு பூசையும் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.


'ஈழநாடு'

வாரமலா

21—11—70

★ பேட்டிக் கட்டுரை
சஞ்சிகைத் தடை பற்றி தமிழ் அறிஞர் கி. வா. ஜ.


★ கட்டுரை
அப்பின் அனுபவம் -கவிஞர் சத்தவனம் எழுதுகிறார்.

★ காதல் சின்னம்
(சிறுகதை)
ச. ம. அச்சுதன் எழுதியது

★ நாவலர் நினைவு கட்டுரை, கவிதைகள்

★ யாழ்ப்பாணத்தில் குறைந்த செலவில் வீடு

மற்றும் அ. செ. முவின் வெள்ளி மல்லிகை, பஞ்சாமிர்தம், கலை அரங்கம், குடும்பச் சுடர், இரசிகமணி கனக செந்திநாதன் எழுதிய சிறுவர் கவிநய வரிசையுடன் மாணவர் மலர் ஆகிய அம்சங்களுடன் வெளிவருகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தினசரி 2-30, 6-30 , 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

வைத்தியசாலைப் பொறுப் பதிகாரியான திரு. பஞ்சலி ங்கத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு புங்குடு தீவு கல்வி வளர்ச்சிக்கழகச் செயலாளர் திரு. யோ. பூராசா கேட்டுள்ளார்.

## வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பீபோயா 2-30
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
நடித்த
முகராசி

## ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
ஜெமினி- சரோஜாதேவி
நடித்த
பனித்திரை

## MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p. m.
Poya days 4 shows
Kerwin Mathews
in
CRACK IN THE WORLD

## REGAL
Jaffna
Daily 10-00 a. m.
4-00 & 8-00 p. m.
Omar Sharif
Julie Christie
in
DOCTOR ZHIVAGO

9-30 நாடகம் 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

# இன்றைய பலன்

கார்த்திகைமாதம் 5-ந்திகதி
(20-11-70)

மேஷம்- எதிர்காலம் பிரகாசமடைய இன்று நடவடிக்கை எடுக்கப்படும் தொழில்துறையில் முன்னேற்றமான நிலை தென்படும்.

ரிஷபம்- செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். உறவினர் ஒருவருக்கு உதவி செய்யவேண்டிய அவசியம் ஏற்படும்.

மிதுனம், வாழ்க்கையில் மந்தநிலை ஏற்படும் எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் பாதிக்கப்படும்

கடகம்- விரக்திநிலை உருவாகும். வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும்.

சிம்மம்- வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் மனப்பான்மை உருவாகும். ஏமாற்றமடையவேண்டிய நிலை தென்படும்.

கன்னி ஆசாரக் குறைவான சம்பவங்கள் இடம் பெறும். உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

துலாம்- இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும் சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

விருச்சிகம்- தெளிந்த மனம். தெய்வசிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

தனுசு; ஆமைவேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும்.

மகரம்- இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இல்லம் பல் கலைக்கழகமாக மாறும்.

கும்பம்- பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். உணவு விடயத்தில் பிரியக்குறைவு தென்படும்.


மீனம்- நீண்டநாள் கனவு இன்று நனவாகும் பெரியவர்கள் உதவிக்கு வருவர் புண்ணியவிருப்பு மேலிடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

20-11-70 இன்றுமுதல்
வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 9-45 மணிக்கு
★ ஜெய்சங்கர் ★ வாணி ஸ்ரீ
★ மனோகர் ★ ஆனந்தன் ★ நாகேஷ்
★ விஜயலலிதா ★ சுந்தரராஜன்
மற்றும் பலர் திறம்பட நடித்த
தேவரின்

# நேர்வழி

டைரக்ஷன்: எம். ஜி. பாலு இசை: பி. எஸ். திவாகர்



# உங்கள் விருந்தாளிகளுக்கு அதி சிறந்ததையே பரிமாறுங்கள்

விருந்தானாலும், சிறு வைபவமெனினும் மகிமையான முழுமைபெற நான்கு விடயங்கள் அத்தியாவசியம். ஒன்று, நீங்கள்; இரண்டு, உங்கள் நண்பர், மூன்று காதுக்கினிய பாட்டு, நான்கு அதி சிறந்த யானை மார்க் குளிர் பானங்கள்!

ஓரேஞ் பார்லி, பிட்டர் லெமன், நெக்டோ, லெமனேட், இவை மட்டுமா. இன்னும் எத்தனையோ சுவைமிகு பானங்கள் யானை மார்க்குடன் வருகின்றன.
சம்பாஷணைக்கும், சமூகத் தொடர்புக்கும் சிறந்தவை யானை மார்க் குளிர்பானங்களே!

எலிபன்ட் ஹவுஸ்

GRANT 92 114 70
GRANT 91 114 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பாகிஸ்தான் இயற்கைச் சேதம்

# உலக நாடுகளின் உதவி கோரும்படி ஐ. நா. விடம் 42 நாடுகள் வற்புறுத்து

நியூயோர்க், நவ, 19

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இயற்கை அழிவுக்கு நிவாரணமாக உலக நாடுகள் அவசர உதவிகளை வழங்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கும்படி ஐ. நா மகாசபையை 42 நாடுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

பல நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவிகளை அனுப்பிக்கொண்டிருக்கின்றன,

உலக வங்கியின் தலைவர் திரு மக்னமாராபாக், அதிபர் ஜெனரல் யாஹ்யாகானுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியொன்றில் உலக வங்கியினதும் சர்வதேச நிதி ஸ்தாபனத்தினதும் தேவையான உதவிகள் கிடைக்குமென்று உறுதி தெரிவித்துள்ளார். நிதி உதவியின் அளவு குறிப்பிடவில்லை.

சோவியத் யூனியனிலிருந்து உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும் ஏற்றிக்கொண்டு வந்த கப்பல்கள் சிட்டாங்க வந்து சேர்ந்துள்ளன.

காலரா, டைபோயிற் போன்ற நோய்கள் கிழக்குப் பாகிஸ்தான் இயற்கை அழிவிலிருந்து தப்பியவர்களை பதம் பார்க்கத் தொடங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சோவியத்யூனியன் இந்த நோய்களைக் குணப்படுத்தத் தேவையான மருந்து வகைகளை அனுப்பி வைத்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மக்களுக்கு விமானத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன.

## இஸ்ரேல் ஆயுத விற்பனைக்கு ரூ. 50 கோடி டாலர்

### பார்லிமெண்டில் நிக்ஸன்

வாஷிங்டன், நவ. 19

இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனை செய்ய 50 கோடி டாலர் வேண்டுமென அமெரிக்கப் பாரிலிமெண்டில் அமெரிக்க அதிபர் திரு. றிச்சர்ட் நிக்ஸன் கூறியுள்ளார்.

பொருளாதார ஆயுத உதவிகள் போன்றவற்றை அளிப்பதற்கு 103 கோடி ரூபாய் வேண்டுமென்றும் இதில் பாதிப் பகுதி இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனை செய்வதற்கென்றும் அவர் கூறினார்.

கம்போடியாவுக்கு ஆயுத உதவிக்கு 15 கோடி ரூபாய் என்றும் திரு. நிக்ஸன் கூறினார்.

## கொலை

கல்கத்தா, நவ. 19

மேற்குவங்காள சட்டப் பிரிவுகாரியதரிசி திரு. பிஸ்மாஸ் பூங்காவொன்றில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார் நேற்று பிற்பகலில் இந்தச்சம்பவம் நடந்தது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு இவர் மரணமானர். இவரது கொலைசம்பந்தமாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்,

## பட்டதாரி ஆசிரிய நியமனம்

## பேராதனைப் பல்கலைக்கழக ஆசிரிய கழகம் அதிருப்தி

பேராதனை, வியா.

"இலங்கையில் கல்வி பயின்ற இளைஞர் மத்தியிலே நிலவும் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை இலங்கைப் பல்கலைக்கழகத்து ஆசிரியர் சங்கம் பாராட்டுகின்றது: அதே நேரத்தில் கல்விப் பகுதியினர் அண்மையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தபோது பயன்படுத்திய தெரிவு முறையை இக்கழகம் வன்மையாக மறுத்துத் தனது கடும் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறது. பட்டதாரிப் பரீட்சையில் உயர் பிரிவுகளிலே சித்தியடைந்தோருள் பெரும்பாலானவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் கல்வியில் பெற்ற தேர்ச்சியைவிட வேறு காரணங்களே இத்தெரிவை நிர்ணயித்திருப்பதாகத் தோன்றுகின்றன என்பதையும் இக்கழகம் கண்டு வருந்துகின்றது" எனக் கூறும் தீர்மானத்தைப் பேராதனையில் உள்ள இலங்கைப் பல்கலைக் [illegible] கங்களிலே படிப்போர் மத்தியிலும் படிப்பிப்போர் மத்தியிலும் மனக்கசப்பையும், தாம் செய்யும் கடமையிலே பயனில்லை என்ற உணர்ச்சியையும் வளர்க்க உதவும் என்பதையும் இக்கழகம் குறிப்பாக எடுத்துரைக்க விரும்புகிறது.

## அருணகிரிநாதர் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். இசைஅபிவிருத்திச் சங்கத்தினரின் ஆதரவில் அருணகிரிநாதர் விழா இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் கில்னர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. சித்தூர் சுப்பிரமணியபிள்ளை செல்வி குணபூஷணம் நாகலிங்கம், அளவையூர் எம். பி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் [illegible]ன்னிசை நிகழ்ச்சிகளும் [illegible]டம்பெறும்.

நாயன்மா[illegible]

## 'டிஸ்பென்சரியை தரம் உயர்த்துக'

### மண்டைதீவு ல.சு.க.கிளை தீர்மானம்

புங்குடுதீவு, புதன்

'இலட்சியப் பற்றில்லாத சிலர் பதவிகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் சுதந்திரக்கட்சிக் கிளைகள் அமைக்க முனைகின்றனர். இவர்கள் மத்தியில் மக்கள் மிக்கவிழிப்புடனிருக்க வேண்டும்' என மண்டைதீவு லங்கா சுதந்திரக் கட்சிக்கிளைத் தலைவரும் முன்னாள் மண்டை தீவுக் கிராமசபைத் தலைவருமான திரு க. கதிரவேல் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கட்சி இலட்சியத்தைக் கடைப்பிடித்து நட்புறவின் மூலம் தமிழர் தம் உரிமைகளை அடைய வேண்டும். எமது இளைஞரின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் இன ஒற்றுமைக்கும் கட்சி பாடுபட வேண்டும் என அவர் கூறினர்.

மண்டைதீவிலுள்ள அரசினர் டிஸ்பென்ஸரியின் தரத்தை உயர்த்தி வை[illegible]திய அதிகாரியை நியமி[illegible] வேண்டுமென்றும், அங்[illegible] [illegible]டிப்பிடித் துறைமுகம் [illegible]மைக்க வேண்டுமென்றும், அல்லைப்பிட்டி- மண்டைதீவு [illegible]

ஐசக் கோரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன. தீர்மானப் பிரதிகள் கட்சியின் தீவுப் பகுதி அமைப்பாளர் திரு. ப. கதிரவேலுவுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டன.

மண்டைதீவில் கருத்தரங்கமொன்றை நடத்துவதென்றும் அதற்கு அமைச்சர் திரு செ. குமாரசூரி [illegible]

## விமானத்தைச் சுற்றிநின்று கதறி அழுதனர்

கராச்சி, நவ. 19

புயலால் அழிந்துபோன பகுதிகளை விமானத்தில் சுற்றிப் பார்வையிட்டுக்கொண்டிருந்த வெளிநாட்டு நிருபர் கோஷ்டி கட்டியாத்தீவில் ஓரிடத்தில் இறங்கி சிலநிமிடநேரம் நின்ற போது நெஞ்சை உருக்கும் சம்பவம் நடைபெற்றது.

புயலால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுவிடுகளை இழந்து அனாதவராக நின்றுகொண்டிருந்த பெண்கள் குழந்தைகள் பெரியவர்கள் அந்த விமானத்தைச் சுற்றி நின்றுகொண்டு கதறி அழுதனர்,

தம்மையும் அவ் விமானத்தில் ஏற்றிச் செல்லுமாறு கேட்டனர். இதே போன்ற பரிதாபகரமான சம்பவங்கள் இந்த விமானத்தில் சென்ற நிருபர் கோஷ்டிக்கு அனுபவமாகக் கிடைத்தது.

அமெரிக்கா அனுப்பி வைத்த பல ஹெலிகொப்டர் விமானங்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளன, இந்த விமானங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று உதவி வேலைகளில் ஈடுபட்டுள்ளன.

# தமிழ் நாட்டில் பகத்சிங்கின் அன்னை

## காலில் வீழ்ந்து சிவாஜி கணேசன் வணங்கினர்

சென்னை, நவ 19 சிவாஜி தரிசித்தார் [illegible]

# உபதபால் அதிபர்களுக்கு பென்ஷன் வழங்கும் திட்டம்

## ஆராய கமிட்டி நியமிக்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

உபதபால் அதிபர்களுக்கு பென்ஷன் வழங்கும்திட்டம் பற்றி ஆராய கமிட்டி ஒன்று நியமிக்கப்படவிருப்பதாக தபால் தந்திஅமைச்சர் திரு. செல்லையாகுமாரசூரியர் உபதபாலதிபர்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

கமிட்டியில் அங்கம்வகிப்பதற்கு உபதபால் அதிபர்கள் ஐக்கியமுன்னணியிலிருந்து 3 பிரதிநிதிகளை சிபார்சு செய்யும்படியும் தபால் அமைச்சர் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த மாதம் 24ந் திகதி ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. அமரதுங்கா தலைமையில் இணைக்காரியதரிசிகள் திரு. ககத்துடாவ, திரு. ஐ. நடராசா ஆகியோர் அமைச்சரை கொழும்பில் சந்தித்து தங்கள் பென்ஷன் திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர். இதைத்தொடர்ந்து உத்தேச பென்ஷன் திட்டத்தை சமர்ப்பிக்கும்படி செப்டம்பர் மாதம் 6-ம் திகதி ஐக்கிய முன்னணியினரை அமைச்சர் கடித மூலம் கேட்டிருந்தார். வருடமொன்றுக்கு 4 லட்சம் ரூபா மேலதிகமாகத் தேவைப்படும் என உபதபாலதிபர்கள் சங்கம் அறிவித்திருந்தது.

செப்டம்பர் மாதம் 7ம் திகதி தபாலமைச்சரால் உபதபாலதிபர்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளர் திரு. ஐ. நடராசாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'ஐக்கிய முன்னணியினரால் அனுப்பிவைக்கப்பட்ட பென்ஷன் திட்டம்பற்றிய கோரிக்கையை உதவித்தபால் மாஅதிபரிடம் சமர்ப்பித்துள்ளேன், உதவித்தபால் மாஅதிபரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் கமிஷன் நியமிப்பதுபற்றி ஆராயப்படும். அவரின் யோசனைக்கும், சங்கங்களின் திட்டங்களுக்குமிடையே அதிக வித்தியாசம் இருந்தால் மட்டுமே கமிட்டி நியமிக்கப்படும் அல்லது மந்திரி சபையில் இதுசம்பந்தமான மகஜரைச் சமர்ப்பிப்பேன்.

செப்டம்பர் மாதம் 12 ம் திகதி அமைச்சின்செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்பென்சன் கமிட்டி பற்றி அமைச்சர் ஆராய்ந்து கொண்டிருப்பதாக அறிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க உபதபாலதிபர்களுக்கு சேமலாபநிதி வழங்குவது பற்றிய மகஜரை வெகுவிரைவில் தபாலமைச்சர் மந்திரி சபையில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

## 'நாவலர் வழி சென்றால் பிரச்னைகள் தீரும்'

உடுப்பிட்டி, வியாழன்

"தமிழ்நாட்டில் அந்நிய ராட்சியின் கெடுபிடியில் சைவம் அழிக்கப்பட்ட போது ஈழத்து ஆறுமுக நாவலர் சைமதம் அழியாது உயிரூட்டினர். சைவத்தையும், தமிழையும் பாதுகாக்கவே ஆறுமுகநாவலர் தோன்றினர். சமுதாயத்தில் கஷ்டமான சூழ்நிலைகள், நெருக்கடிகள் தோன்றும்போது ஆறுமுகநாவலர் காட்டிய பாதையில் சென்றால் எப்பிரச்னையையும் இலகுவில் தீர்த்துவிடமுடியும்."

இவ்வாறு திரு. சிவநேயச்செல்வன் நேற்று முன்தினம் மாலை யாழ். தொழில்நுட்பக்கல்லூரி இந்து மாணவர் மன்ற நாவலர் விழாவில் பேசுகையில் வேண்டிக்கொண்டார். தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் திரு சு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நாவலர் விழா நடைபெற்றது.

புலவர் தமிழ்மாறன் பேசுகையில், "எமது நாட்டுப் பெண்கள் பழைய காலப் பெண்களின் குலவழக்கங்களைப் பின்பற்றுவதின் மூலமே சிறந்த குடும்ப வாழ்க்கையை நடாத்தமுடியுமென்று நாவலர் வழி காட்டியுள்ளார். எமது பெண்கள் நாகரீக மோகத்தில் மூழ்கிவிடுப்பது வேதனைக்குரியது" என்றார்.

கவிஞர் சோதிருபன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் என். தவபாலன் (நிலவின்தாசன், ஆர். ஜெயபாலன், வே. [illegible]

செயலாளர் செல்வி நகுலராதா நன்றி தெரிவித்துப் பேசினர்.

## புதிய செனட்டர்

கோட்டை, வியா

காலி மேயர் திரு. டபிள்யு ரி. விஜேகுலசூரியா செனட்டராக நியமனம் பெற்றுள்ளார்.

செனட்டர் வை ஆர் பியசேனவின் மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புமுகமாகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## யாழ். மாவட்ட நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

சித்தன்கேணி சிவச்செல்வி கலாமன்றம் நடாத்தும்யாழ் மாவட்ட நாடகப்போட்டி எதிர்வரும் பொங்கலன்று நடைபெறவிருக்கிறது. மேற்படி போட்டி இடைத்தெரிவு இறுதித் தெரிவுஎன இரு பிரிவாக நடைபெறும்.

இறுதித் தெரிவில் முதற்பரிசு பெறும் நாடகத்துக்குத் தங்கப் பதக்கமும் இரண்டாம் மூன்றும் பரிசு பெறும் நாடகங்களுக்கு வெள்ளிப்பதக்கங்களும் பரிசாக வழங்கப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளைச் சிறந்த முறையில் நடாத்த சைவப்புலவர் விழா ஓயக்குனர் திரு, நா, க. தங்கரத்தினம்திரு. மு. தர்மதாசன் கிராம சேவையாளர் ஆகி [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கணேசன் வணங்கினார்

சென்னை, நவ 19

இந்திய விடுதலைப்போராட்டத்தில் தூக்குமேடை ஏறிய மாவீரன் பகத்சிங்கின் தாயார் திருமதி வித்யாவதி தேவி அம்மையில் சென்னைக்கு வந்திருந்தார் எழும்பூரிலுள்ள சிந்துசதனில் அகில பாரத வித்யார்த்தி பரிஷத் சார்பில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது, இவ்வைபவத்திற்கு தீபம்' சஞ்சிகை ஆசிரியர் திரு நா பார்த்தசாரதி தலைமை வகித்தார், வித்யாவதி தேவியுடன் பகவத்சிங்கின சகோதரர் திரு குல்பீர்சிங்கும் வந்திருந்தார்

'ஒருநாட்டை உருவாக்க நாறுயிரம் பேர் தியாகம் செய்யவேண்டும் என்பதை பகத்சிங் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என திரு குல்பீர்சிங் பேசுகையில் கூறினார். அன்று தேசவிடுதலைப் போரில் மாணவர்கள் முன்னணியில் நின்றார்கள் என்றும், இப்போதும் அவர்களே நாட்டின் புனரமைப்புக்குத் தலைமை வகித்து நடத்திச்செல்லவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்

## சிவாஜி தரிசித்தார்

பகத்சிங்கின் அன்னையை நடிகர் சிவாஜி கணேசன் வந்து தரிசித்தார் வித்யாவதி தேவியின் கால்களில் வீழ்ந்து திரு கணேசன் வணங்கினார்

''நான் சாதாரண கலைஞனை இருந்துவிட்டுப் போக விரும்பவில்லை. அதன் காரணமாகத்தான் தேச விடுதலைக்காகத் தியாகங்கள் புரிந்த வீரபாண்டிய கட்டபொம்மன், வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார் போன்றவர் பாகங்களை ஏற்று நடித்தேன். இன்னும் ஒரு வருடகாலத்துள் மாவீரன் பகத்சிங்கின் வாழ்க்கையைத் திரைப்படமாக்கி அதன் மூலம் தேசபக்தி என்றால் என்ன என்பதை இளஞ்சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுவேன்'' என நடிகர் சிவாஜிகணேசன் பேசுகையில் கூறினார்.

வித்யாவதி அன்னையாரின் கால் பட்டதால் சென்னை நகரம் புனிதமடைந்தது என திரு பார்த்தசாரதி கூறினார்.

இக்கழகம் கண்டு வருந்துகின்றது'' எனக் கூறும் தீர்மானத்தைப் பேராதனையில் உள்ள இலங்கைப் பல்கலைக் கழக ஆசிரியர் கழகம் நிறைவேற்றியுள்ளது. தீர்மானம் மேலும் கூறுவதாவது:

ஒருவருக்குள்ள கல்வித் திறனுக்கும் தனிச்சிறப்புக்கும் உரியஇடம் அளிக்கப்பட்டாலேதான் பல்கலைக் கழகங்களின் அமைப்பினைத் திருத்தியமைப்பதற்கும் அவற்றின் கல்வித்தரத்தைச்சீர் திருத்துவதற்கும் தற்பொழுது இடப்படும் திட்டமானது உண்மையிலே பயனுடையதாக அமையும் என்பதை இக்கழகம் உயர் அதிகாரிகளுக்கு எடுத்துரைக்க விரும்புகின்றது. பல்கலைக் கழகப் பரீட்சைகளிலே ஈட்டப்படும் சாதனையைப் புறக்கணிப்பது பல்கலைக் கழ

---

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முன்னணியிற் சென்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களின் முன்னோடிகளுள் முதல்வரான பகத்சிங்கை ஆட்சியினர் தூக்கிலிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

---

நாயன்மார்கட்டில்

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம்நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளையும் மறுதினமும் நாவலர்குருபூசை நடைபெறும்.

நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் நடாத்தும் குருபூசையின்போது பஜனை சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

## விவசாயப்படை வீரர் சம்பளம்

உடுப்பிட்டி, வியா.

12-7-70ல் கலைக்கப்பட்ட விவசாயப்படை முகாம் வீரர்களின் இருமாதச் சம்பளம் தற்போது வழங்கப்பட்டுவருகின்றது இத்தருணத்தில் சில விவசாயப் படை வீரர்களுக்குச் சம்பளமும், சம்பள வவுச்சரும் கிடைக்காததால் அவர்கள் விவசாயப்படை முகாம் தலைமைப்பீடத்திற்கு முறையிட்டுள்ளனர்.

## பிராந்திய பிரதிநிதி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுகாதார இலாகா நுண்கருவியாளர் சங்கத்திற்கு வடபிராந்திய பிரதிநிதியாக யாழ். அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த திரு. சொக்கலிங்கம் தியாகராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

அகில இலங்கைக்குமான நுண்கருவியாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கான தெரிவு கொழும்பு, அரசாங்க சேவையாளர் விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்றபோது டாக்டர் எவ். ஏ. விக்கிரமசிங்கா தலைமையுரை நிகழ்த்தினார்

## இடமாற்றம்

உடுப்பிட்டி, வியா.

பண்டாரவளை சென். மேரிஸ் மகாவித்தியாலயத்தில் உதவியாசிரியையாகக் கடமையாற்றிய திருமதி பரமசிவம் அன்னலட்சுமி இம்மாதம் முதல் அராலி தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---


ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்றும், அல்லைப்பிட்டி- மண்டைதீவு இணைப்பு வீதியைப் பூர்த்தி செய்ய வேண்டுமென

ரங்கமொன்றை நடத்துவதென்றும் அதற்கு அமைச்சர் திரு செ. குமாரசூரியரை அழைப்பதெனவும் முடிவுசெய்யப் பட்டது.

யரங்கில் கவிஞர்கள் என். தவபாலன் (நிலவின்தாசன், ஆர். ஜெயபாலன், வே. குமாரசாமி ஆகியோர் பங்கு பற்றினர். மன்றச்

குனர் திரு. நா. க. தங்கரத்தினம்திரு. மு. தர்மதாசன் கிராம சேவையாளர் ஆகியோர் ஏற்பாடு செய்கின்றனர்.


# "செவன"



கூரை ஓடுகள்

- "செவன" ஓடுகள் (இரண்டாம் தரத்திலுள்ளவைகள்) இப்போ சுன்னாகம் மரத்தளபாடத் தொழிற்சாலையில் பெற்றுக் கொள்ளலாம்.
- இவ் ஓடுகளை மிகவும் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். 1,000 ஓடுகளின் விலை ரூபா 375/-மாத்திரமே.
- செலவைக் குறைப்பதற்காக கட்டிடவேலை செய்பவர்கள் பெரும்பாலும் இவ் ஓடுகளையே உபயோகிக்கின்றனர்.

விசாரணைகள்:-

முகாமையாளர்


தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனம்

(மரத்தளபாடத் தொழிற்சாலை)

சுன்னாகம்.

தேசிய சிறுகைத்தொழிற் கூட்டுத்தாபனம்






# யாழ்க்குடா விவசாயிகளே!

உங்கள் அபிமான இரு சில்லு ட்ராக்டர் லான்ட்மாஸ்டர் 150.

பூவுலகின் எத்திசையிலும், லான்ட்மாஸ்டர் 150 ஒன்று நிச்சயமிருக்கக் காண்பீர்கள். பலமானது நம்பிக்கையானது. அமோக பணிகள் பல புரியவல்லது. நாநிலமெங்கும் பரவிய சேவை வசதிகள் கொண்டது.

இத்தகைய தகுதிகள் கொண்ட வலிமிகு பணியாளியின் உருவாக்கம் ஓர் இலங்கையரையே சாரும். ஆசிய நிலைமைகளை மனதிற் கொண்டு உருவான இவ்வுயர் படைப்பு இலங்கையில் 2000த்திற்கும் அதிகமான விவசாயிகளால் பாவிக்கப்படுகிறது. நாடெங்கிலும், பயிற்சி பெற்ற, வேண்டிய உபகரணம் கொண்ட, சேவை நிலையங்கள் உதவியின் கொண்டது. உங்கள் தேவைகளுக்குத் தக்கதாக வேண்டிய மேலதிக உபகரணங்கள், உருப்புக்கள் வசதியும் கொண்டது லான்ட்மாஸ்டர்.

லான்ட்மாஸ்டர் 150, இலகுவாகச் செலுத்துக் கூடியது. வேண்டியபோது உழுதலைக் கூட்டலாம்.

உங்கள் வருவாய்க்குத் தகுந்த இலகுவான பணக்கட்டண வசதிகள் உள்ளன.

புதிய விநியோகஸ்தர்: ஈ. சி. செல்வராஜன்

'பார்ம் சேர்விசஸ்'

55 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

மேல் விபரங்களுக்கு, கூப்பனை நிரப்பி அனுப்பவும்

பெயர்.....................................................

முகவரி.....................................................

BG லான்ட்மாஸ்டர் 150



Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உண்மையை, அன்பை, தூய உள்ளத்தை எந்தச் சக்தியாலும் முறியடிக்கமுடியாது. எனவே நாம் உண்மையானவர்களாகவும் அன்புடையவர்களாகவும் தூயஉள்ளம் படைத்தவர்களாகவும் நம்மை வளர்த்துக்கொள்ளவேண்டும்.


# ஈழநாடு

Eelanadu A Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna: Telephone: 889.

[illegible] சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 5-ந் திகதி (20-11-70)


## திரைப்படத் தயாரிப்பு

உள்ளூர்த் திரைப்படங்களின் தரத்தை உயர்த்தவும் திரைப்பட உற்பத்தியை அதிகரிக்கவும் உள்ளூர்த் திரைப்பட உற்பத்தியாளர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஆர். எஸ். பெரேரா தெரிவித்திருக்கிறார்.

■ உள்ளூர் திரைப்பட உற்பத்தியாளர்களுக்கு சில வருடங்களுக்கு வரிவிலக்களிப்பது. ■ நிதிஉதவி அளிப்பது ■ சிறந்த படங்களுக்குப் பரிசுகள் வழங்குவது ■ படத் துறையில் உள்ளவர்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி பெறத்தக்க வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது.

இவை அரசாங்கம் உத்தேசித்துள்ள சில யோசனைகள்.

வரவேற்கத்தக்க பாராட்டுக்குரிய யோசனைகள். இவை வெறும் யோசனைகளாக இருந்துவிடாமல் விரைவாகச் செயல்படத் தொடங்கவேண்டும்.

சிங்கள திரைப்படங்களைப் பொறுத்தவரையில் சில வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளதென்று சொல்லலாம் ஆனாலும் பண வசூலையும் வெளிநாடுகளிலிருந்துவரும் சில படங்களுடன் வசூலில் போட்டி போடவேண்டுமென்பதற்காகவும் சில தயாரிப்பாளர்கள் தரக்குறைவான படங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுகிறார்களென்பதும் உண்மையே. ஆனாலும் தொழில்நுட்பத்திலும் சிங்களப் படங்கள் முன்னேறியுள்ளன. சர்வதேசப் பரிசும் சில படங்கள் பெற்றிருக்கின்றன. திரு. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் போன்று மற்றும் படத்தயாரிப்பாளர் சகலவிதத்திலும் தரத்தில்

என்றும் கூறப்படுகிறது. தென்னிந்தியத் திரைப்படங்கள் அத்தனையும் தரம் வாய்ந்த சிறந்த படங்களல்ல மக்களுக்கு எந்தவிதத்திலும் பயன்படுத்த முடியாத பல படங்கள் தென்னிந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன; அவை இங்கும் இறக்குமதிசெய்யப்படுகின்றன. தென்னிந்தியாவில் மட்டுமல்ல வடஇந்தியாவிலும் ஹொலிவூட்டிலும் கூட மக்களுக்குப் பயன்படாத தரக்குறைந்த படங்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன. அவை இங்கு இறக்குமதியாகி திரையிடப்படுகின்றன. மக்களுக்கு எந்தவகையிலும் பயன்தர முடியாத, தரமற்ற, மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய, கொலை, கொள்ளை போன்ற தீய செயல்களுக்கு இளம் உள்ளங்களைத் தூண்டக்கூடிய படங்கள் எங்கிருந்தும் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுப்பதில் யாருக்கும் ஆட்சேபமிருக்கமுடியாது.

அதேசமயம் இதுபோன்ற படங்களைத் தடைசெய்துவிட்டு அதேநேரத்தில் இங்கு படங்களைத் தயாரிப்பதையும் அனுமதிக்கக் கூடாது.

இலங்கையில் இதுவரை தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங்கள் தென்னிந்திய மட்டரகப் படங்களைவிட சிறந்தவை என்று சொல்லக் கூடியதாக இல்லை, "இப்பொழுது தானே இங்கு தமிழ்ப் படங்களைத் தயாரிக்கத்தொடங்கப்பட்டிருக்கிறது இதற்குள் குறை சொல்லலாமா?' என்று சிலர் கூறலாம். தென்னிந்தியத் திரைப்படத் தொழில் வளர்ச்சியையும், இங்கு சிங்களத் திரைப்படத் தொழில் வளர்ச்சியையும் வழிகாட்டியாக வைத்து நமது நாட்டின் கலை, கலாச்சாரத்தைப்

ஆட்சி மன்றத்திலே . . .

நமது நிருபர்
பெரி சுந்தரலிங்கம்

# எம். பி.க்களின் சம்பள உயர்வு பற்றி ரசமான வாதம்

மக்கள் அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டம்- டாக்டர்என். எம்மின் இரண்டாவது வரவு செலவுத்திட்டம்- இலங்கை சுதந்திரம் பெற்ற பின் சமர்ப்பிக்கப்பட்ட 23-வது வரவு-செலவுத்திட்டம் மீதான 10-ம் நாள் விவாதம் இன்று நடைபெற்றபோது, வரவு செலவுத்திட்டம் குழு நிலையில் ஆராயப்பட்டது.

ஆட்சிமன்ற அலுவல்களுக்கு என ஒதுக்கப்பட்ட மான்யங்கள் மீதான விவாதத்தின்போது எம். பி மார்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம்; ஆட்சிமன்றப் பேச்சுகளை வானொலியில் முழுமையாக நேரடியாக ஒலிபரப்புவது; எம். பி. களின் குறைபாடுகள் இன்னோரன்ன விஷயங்கள் விவாதிக்கப்பட்டன,

எதிர்க்கட்சித்தலைவர் ஜே ஆர். இப்போது எம். பி. களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போதாது என்ற உறுதியான கருத்துக்கொண்டவர்; ஆட்சியிலிருந்தபோதும், எதிர்க்கட்சியிலிருந்தபோதும், வாய்ப்பு கிட்டும்போதெல்லாம், சம்பள உயர்வு வேண்டும் என வலியுறுத்தி வந்திருக்கிறார்.

எனவேதான், இன்றும் கிடைத்த வாய்ப்பைப்பயன்படுத்திக்கொண்டு, தனது கருத்தை வெளியிட்டார்: 1931-ம் ஆண்டு, எம். பி. களுக்கு 400ரூபாயும்அமைச்சர்களுக்கு 1000 ரூபாயும் வழங்கப்பட்டது. 1934-ம் ஆண்டிலிருந்து எம். பி. களின் சம்பளம் 500 ரூபாயாகவும், அமைச்சர்களின் சம்பளம் 1500 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. அமைச்சர்களின் சம்பளம் இன்றுவரை 1500 ரூபாயாகவே இருக்கிறது; எம். பி களின் சம்பளம் 1946-ம் ஆண்டில் 600 ரூபாயாக உயர்த்தப்பட்டு, இன்று வரை அப்படியே இரு[illegible] கிறது.

39 வருடகாலமாக 20[illegible] ரூபாய்தான் சம்பள உயர்வு "எம். எம். பெரேரா, டட்லி சேனநாயகா, தகநா

டும் ஒலிபரப்புவது பிழை: ஒலிபரப்புவதாக இருந்தால் அப்படித் தீர்மானித்து எல்லாருடைய பேச்சுகளையும் ஒலிபரப்புவதே சிறந்த வழி என்பதுதான் ஜே. ஆரின் கருத்து.

காலிப்பிரதிநிதி தகநாயகாவோ, இப்பொழுது எல்லாரும் எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும், தனது முன்னைநாள் அமைச்சரவை சகாக்களான யூ. என். பி யினருக்கு எதிராக அவர்களுடைய கருத்துக்கு மாருன கருத்துக்களைத்தான் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

ஜே. ஆர். ஆட்சிமன்றப் பேச்சுகளை ஒலிபரப்புவது சம்பிரதாயத்துக்கு முரணானது என்ருல், அப்படியென்ன சம்பிரதாயம் வேண்டியதிருக்கிறது நாட்டு மக்கள் அவர்களின் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளஆட்சிமன்ற நடவடிக்கைகளை அப்படிக்கப்படியே முழுமையாக நேரடியாக ஒலிபரப்பத்தான் வேண்டும் என்று வாதாடினார் 'தகா.

திரு. பிரின்ஸ் குணசேகரா மொழி விஷயத்திலாகட்டும் வேறு விஷயத்திலாகட்டும் சற்று தீவிரமான கருத்தையே வெளியிடுபவர் அல்லவா? அவர் "வானொலியில் ஒலிபரப்புவதோடு நில்லாமல் வேண்டுமானல், (ரெலிவிஷன்) தொலைக்காட்சியில் காட்டினலும் நல்லதுதான்! அப்படிச் செய்தால் எல்லா எம். பிகளும் ஆட்சிமன்றத்துக்கு ஒழுங்காக வருவார்கள் பண்போடு நடப்பார்கள் தயார் செய்து பேசுவார்கள், இப்படிக்காலியான ஆசனங்கள் கிடக்காது' என்று காலியாகிக் கிடந்த ஆசனங்களைச் சுட்டிக்காட்டிப் பேசினார் பிரின்ஸ்.

தமிழரசுத்தலைவர் திரு. செல்வநாயகமும் எம், பி. மார்களின் சம்பளப்பற்றுக்குறை, ஆட்சிமன்றக் கட்டிடத்தில் உள்ள இட வசதிக்குறை பற்றிப்பேசினார்.

பொத்துவில் எம். பி. மஜீத் எல்லாருக்கும் பதிலடி கொடுப்பதுபோல் சற்று காரசாரமாக கருத்தோடு பேசினார்.

"ஆட்சிமன்ற உறுப்பினர்களின் பேச்சுகளை ஒலிபரப்புவதுபற்றிப் பேசுகிறார்கள். என்னைக்கேட்டால் நாம் பேசிப்பேசியே காலத்தை விரயமாக்கிவிட்டோம், இனிமேலாவது பேச்சைக் குறைத்துக் கொண்டு செயலில் இறங்கவேண்டும் வெறும் வாய்ப்பேச்சால் 'சோஷலிஸம்' பூத்துவிடாது" என்று ஆரம்பத்திலேயே 'சூடாக'த் தொடங்கினார்.

"நாம் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லுக்கும்பொது மக்களின் பணத்தில் எவ்வளவு செலவாகிறது என்பதை உணரவேண்டும். அரசியலமைப்புச் சபையிலே தீர்மானித்திருப்பதைப் போல, ஒவ்வொரு உறுப்பினர்களின் பேச்சு நேரத்தையும்குறைக்கவேண்டும்" என்று பொத்துவில் மஜீத் பொழிந்து தள்ளினார்.

எந்த விஷயத்திலும் மணிக்கணக்காகப்பேசவல்ல உறுப்பினர்களுக்கு இவர் பேசுவது அவ்வளவாகப் பிடிக்காததுதான். மஜீத்தைப் பொறுத்தமட்டில் அவர் பேசியது சரிதான் அவர் என்ருவது ஒருநாள் சில நிமிடங்கள் பேசுபவர் தானே?

# பஸ் நிலையத் தாக்குதல் சம்பவம் மாநகரசபையில் நடந்த விவாதம்

## பகிரங்க விசாரணைக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம்,வெள்ளி 'வடபகுதியில் ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் கடமையாற்றிய பஸ் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு பதிலாக, இங்கு தமிழரோ, சிங்களவரோ, முஸ்லிம்களோ அனுப்பப்பட வேண்டும். அப்பொழுதுதான் இங்கு பஸ் சேவை சரி[illegible]

யாழ்ப்பாணம் மேயர் திரு ரி. எஸ். துரைராஜா.

இ.போ.ச.தலைவருக்கு தந்தி அனுப்பியிருந்தேன் யார் குற்றவாளி என்பதை பார்க்காமல், பகிரங்க விசாரணை நடத்த வேண்டும். பஸ் ஊழியர், பொதுமக்களை மரியாதையாக பாவிக்கிறாக வில்லை. யூனிபோம் போட்டதும், மரியாதை[illegible] மக்களையும் மதிக்கிற[illegible]ில்லை. அவர்களிடமும், கைவரிசையை காட்டுகிறார்கள். அன்று நடந்த விஷயத்திற்கு பஸ் காரியாலய உத்தியோ

லால் இச்சபையில் பொதுவான அடிப்படையில் தீர்மானம் எடுக்கவேண்டும் சகலருக்கும் சிபார்சுசெய்யப்படவேண்டும்.

ஏ. துரைராஜசிங்கம் பொதுவான அடிப்படையில் தான் கோரவேண்டும்.

எஸ், நாகராசா: முன்னாள் யாழ். எம் பி ஜி ஜி பொன்னம்பலம் இப்பகுதிகளில் வீடமைப்பு திட்டம் அமைக்க நடவடிக்கை எடுத்தார் அவரின் ஏற்பாட்டின்படி 8

தாரம் பற்றி இப்ப பேசுகிறீர். சுகாதாரத்திற்காகத்தானே சவக்காலையை அப்புறப்படுத்தும்படி கேட்டோம்: மறுத்துவிட்டீர்களே.

மேயர்; இப்பிரச்னை பற்றி ஆராய ஒரு குழுவை நியமிப்போம்.

பஷீர்: குழுவேண்டாம்.

மேயர்: குழுவிற்கு பஷீர் தலைமை தாங்கட்டும். ஒரு மாதத்தில் அறிக்கை தயாரிக்கட்டும்.

வலைச்சாயம் விற்பனவு:

# வடபகுதியில் மோசடிக் கோஷ்டி?

அம்பன், வியாழன் மீன்பிடி வலைச் சாயம் விற்பனையில் மோசடிக் கோஷ்டியொன்று வடமாகாணத்தில் இயங்கிவருவது அம்பலமாகியுள்ளது. ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வலைச்சாயம் எனக் கூறி, வெறும் தண்ணீரில் சாயம் கலந்து போத்தலில் அடைத்து இவர்கள் வடபகுதி வியாபாரிகளிடம் கைவரிசையைக் காட்டி வருகின்றனராம். ஒருபோத்தல் சாயத்தை 35 ரூபா வீதம் இக்கோஷ்டி விற்பனை செய்துள்ளது.

ஜப்பானிலிருந்து மீன்பிடி உபகரணங்களை இறக்குமதி செய்யும் கொழும்புக் கம்பெனியின் பிரதிநிதிகள் எனத் தம்மை அறிமுகம் செய்துகொள்ளும் இக்கோஷ்டியினர், வடமாகாணத்தில் உப விநியோகத்தர்களை நியமிக்கவிருப்பதாகவும், தாங்கள் ஜப்பானில் இருந்து இறக்குமதிசெய்யவிருக்கும் மீன்பிடி மோட்டார் வெளியிணை இயந்திரங்களுக்கும் உப ஏஜெண்டுகள் தேவையென்றும் கூறினராம். திரும்பவும் ஒரு வாரத்தில் வருவதாகக் கூறிச் சென்றவர்கள் கூறியபடி ஒரு வாரத்தில் திரும்பாததைக் கண்ட முதலாளிகள் பரபரப்புக்குள்ளாகிய தைத் தொடர்ந்து குட்டு வெளிப்படலாயிற்று.

குடத்தனையைச் சேர்ந்த திரு. க. வேலுப்பிள்ளைக்கு இதே கோஷ்டி 6 போத்தல் சாயத்தை விற்று 147ரூபா வாங்கியுள்ளது. இதுபற்றி க வேலுப்பிள்ளை கூறியதாவது:

''டாக்சி ஒன்றில் மூவர் வந்தனர். தாம்ஜப்பானிலிருந்து வலைச்சாயத்தை இறக்குமதி செய்திருப்பதாகவும், தாம் இலங்கையின் ஏகவிநியோகத்தர்கள் எனவும், உப ஏஜண்டுகளை இலங்கையின் பல பாகங்களிலும் நியமிப்பதற்காகவே வந்திருப்பதாகவும் கூறினர். இலங்கையில் தயாரிக்கப்படும் வலைச்சாயத்தைவிட, இது விசேஷமானதென்றும், தாங்கள் மீன்பிடி மோட்டார் வெளியிணை இயந்திரத்தை ஜப்பானிலிருந்து இறக்குமதிசெய்யப்போவதாகவும் அவற்றுக்கும் உங்களையே உப ஏஜண்டுகளாக நியமிக்க இருக்கிறோம் என்றும் கூறினர். சில சாயப் போத்தல்களைச் சாம்பிளாக விற்பனை செய்யும்படியும், தாங்கள் ஒரு வாரத்தில் திரும்பி வரும்போது பில் புத்தகமும் கொண்டுவருவதாகவும், பில் புத்தகத்தை மறந்துபோய் விட்டுவிட்டு வந்ததாகவும் கூறி எனது பெயர், விலாசத்தையும் தாங்கள் வைத்திருந்த ஒரு டயறியில் எழுதினர். இவர்கள் ஒரு கிழமையாகியும் வராததால் சில கடற்தொழிலாளரை வரவழைத்து வலைச்சாயத்தைப் பரீட்சித்துப் பார்த்தபொழுது உண்மையான வலைச் சாயமல்ல என்பது புலனாகியது. போத்தலினுள் வெறும் தண்ணீருக்கு நிறமூட்டப்பட்டிருந்தது தெரியவந்தது இவர்கள் கொடுத்த பற்றுச் சீட்டில் 'சிலோன் மரீன் சேர்வீஸ் கொம்பனி லிமிட்டெட், மீன்பிடி வலைகளும் சாயவகைகளும்இறக்குமதியாளர், சி,எம்.எஸ், த.பெ.இல: 21,கொழும்பு' என்றும் சாயம் உற்பத்தி செய்த கொம்பனி 'நிப்பன் ரேயன் டை கொம்பனி லிமிட்டெட், ஜப்பான்' என்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கொழும்புத்துறையில் சொல்லும், இங்கு சொல்ல வேண்டாம்.

காணிப்பிரச்னை, வீடில்லாப்பிச்னைபற்றி ஒரு குழு நியமிக்கவேண்டும் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேம்ஸ் பீரிஸ் போன்று மற்றும் படத்தயாரிப்பாளர் சகலவிதத்திலும் தரத்தில் உயர்ந்த சிறந்த படங்களைத் தயாரிப்பதற்கு அரசாங்க உதவியும் ஊக்கமும் அவசியம்தான்.

தமிழ்த் திரைப்படங்களைப் பொறுத்தவரையில் இங்கு சிறந்த படங்களைத் தயாரிப்பதற்கு சிங்களப் படங்களை விட, அதிக உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டியது மிகவும் அவசியம். தரமுள்ள சிறந்த தமிழ்ப்படங்கள் இங்கு தயாரிக்கப்பட்டால் வெளிநாடுகளிலும் அவை திரையிடப்பட்டு அந்நிய செலாவணியைச் சம்பாதிக்க முடியும். தென்னிந்தியத் திரைப்படங்கள் இங்கு இறக்குமதியாவதைத் தடைசெய்ய வேண்டுமென்றும் அவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும் சிலையும் வழிகாட்டியாக வைத்து நமது நாட்டின் கலை, கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாக, நமது நாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்களை நமது நாட்டில் உள்ள இயற்கை எழில்நிறைந்த சூழலில் தரமான படங்களைத் தயாரிக்க முடியாதென்று சொல்லஇடமில்லை.

சிறந்த நடிகர்கள், தொழில்நுணுக்கம் தெரிந்தவர்கள் இங்கு இருக்கின்றனர். படத் தயாரிப்பாளர்கள் சிறந்த படங்களைத் தயாரிக்க முன்வரவேண்டும். தகவல் ஒலிபரப்பு அமைச்சர் தெரிவித்துள்ள யோசனைகள் செயல்படுத்தப்பட்டால் திரைப்படத் தயாரிப்பில் பணம் முதலீடுசெய்பவர் முன்வருவரென்று எதிர்பார்க்கலாம்.

# சொல்லம்புகள்

தகநாயகா: (செனட் சபையின்) மரணச் சடங்கு எப்போது?

பிரதமர்: ஏன், கொள்ளிவைக்கப் போகிறீரோ?

0 0

ஜே. ஆர். ஜயவர்த்தனு: இந்தியாவில் எம். பி.மார்களுக்கு வீடு, கார், காருக்குப் போடக் கொடி (சிரிப்பு) கொடுக்கிறார்கள்; இங்கிலாந்தில் பென்ஷன் கொடுக்கிறார்கள்; நம் நாட்டிலோ பிச்சைச் சம்பளம்போல 600 ரூபாய் கொடுக்கின்றார்கள்!

0 0

பிரின்ஸ் குணசேகரா: அரசாங்க ஊழியர்களுக்கும், ஏனையோருக்கும் வயதுக் கட்டுப்பாடு விதித்து, 55, 60 வயதுக்குப் பின் ஓய்வுபெறச் சொல்லும்போது எம். பி.களுக்கு மட்டும் ஏன் வயதுக் கட்டுப்பாடு விதித்து, ஓய்வுபெறச்செய்து இளம் சந்ததியினருக்கு இடமளிக்கக்கூடாது?

தகநாயக்கா: வயது எப்படியிருந்தாலும் நான் உம்மைவிட ''இளமை''யானவன் தான். (சிரிப்பு)

பிரின்ஸ்: காலிப் பிரதிநிதியின் 'வாலிபத் தன்மை' அவரைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்கும், 'சிராவஸ்தி'யில் இருப்பவர்களுக்கும் தெரிந்த விஷயம் தான். (பெருஞ்சிரிப்பு)

0 0

பொத்துவில் மஜீத்: பேசிப் பேசியே காலத்தைக் கடத்திவிட்டோம் நாம்; இனி நமது பேச்சுகளை அப்படியே வானொலியிலும் ஒலிபரப்பினால் வெளியே உள்ள மக்கள், பேச்சுக்களைக் கேட்பதை விடுத்து, உள்ளே வந்து நம்மையெல்லாம் வெளியே பிடித்து அனுப்பிவிடுவார்கள் (சிரிப்பு)

0 0

டாக்டர் என். எம்: எம். பி.க்களுக்குப் 'பென்ஷன் கொடுக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கவேண்டியவர்கள் மக்கள்' எவ்வளவு வயதானவர்களும் சரி, மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பினால் ஆட்சிமன்றத்தில் அங்கம் வகிப்பதில் பிழை என்ன? எனக்கு வயதானாலும், மக்கள் அனுப்பும் வரை நான் வந்துகொண்டிருப்பேன்! (சிரிப்பு)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

39 வருடகாலமாக 200 ரூபாய்தான் சம்பள உயர்வு ''எம். எம். பெரேரா, டட்லி சேனநாயகா, தகநாயகா, என்னைப் (ஜே. ஆர்.) போன்றோர், ஸ்டேட் கவுன்சில் காலந் தொட்டு, சட்ட சபையில் அங்கம் வகித்து, அரசியலுக்காகவே எங்கள் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறோம்; தியாகம் செய்திருக்கிறோம் எனவே ஆட்சிமன்ற உறுப்பினர்கள் செய்கின்ற சேவைக்கு ஏற்ப ஊதியம் அளிக்கவேண்டும்; பத்திரிகைகள் கண்டிக்கின்றன என்பதற்காகப்பயந்துகொண்டு சம்பள உயர்வு கொடுக்காமலிருப்பது சரியல்ல; எங்களுக்குள்ள சிரமம் எங்களுக்குத்தான் தெரியும்; பத்திரிகைக்காரர்களுக்குத் தெரியாது'' என்று சம்பளம் உயர்வுக்கான வழக்கைச் சாதுர்யமாக முன்வைத்துப் பேசினார் சாமர்த்திய சாலியான ஜே, ஆர். ''கொடுத்தால் சரியான சம்பளம் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் கொடுக்காமலே விட்டுவிடுவதுதான் நல்லது'' என்று சொல்லிவிட்டு ''எம். பிகளின் சம்பள உயர்வைப் பற்றி ஆலோசிக்கும்போது எதிர்க்கட்சித்தலைவரின் நிலைமையையும் சற்று ஆலோசிப்பது நல்லது'' என்று 'குபீர்' சிரிப்புக்கிடையே சொன்னார் ஜே. ஆர்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது, நிதி அமைச்சர் என் எம்., பிரதமர் சிறிமா ஆகியோர் ஆட்சிமன்றத்தில் பேசிய பேச்சுகள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. ஆட்சிமன்றச் சொற்பொழிவுகளை அப்படியே பதிவு செய்து வானொலியில் ஒலிபரப்பியது இலங்கை வரலாற்றில் இதுதான் முதற்தடவையாகும். இது நாள்வரை கூட்டப்பட்டு வந்த ஆட்சிமன்ற சம்பிரதாயம் அதாவது ஆட்சிமன்றப்பேச்சுகளை வானொலியில் ஒலிபரப்புவது இல்லை என்ற சம்பிரதாயம் - முறிக்கப்பட்டு விட்டது. ஆட்சியாளரின் இந்தச் செய்கையால் என்று ஜே. ஆர். வருத்தப்பட்டுக் கொண்டார்.

ஆட்சிமன்றத்தில் கலந்தாலோசிக்காமல் எதிர்க்கட்சியினருக்கு அறிவிக்காமல் - கட்சித்தலைவர்களைக் கலக்காமல் இப்படிச்செய்தது முற்றிலும் பிழையான செயல் என வாதிட்டார் ஜே. ஆர்.

ஆட்சிமன்றத்தில் வாதம், பிரதிவாதம், மறுவாதம் என நடைபெறும் வேளையில் ஒருபக்கச் சார்பாக அமைச்சர்கள் பேசுவதையோ அரசாங்கத்தரப்பினர் பேசுவதையோ மட்

பஸ் சேவை சீரடையும்'

யாழ்ப்பாணம் மேயர் திரு ரி. எஸ். துரைராஜா நேற்று நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

31-10-70ம் திகதி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நடைபெற்ற சம்பவம்பற்றி ஒரு பகிரங்க விசாரணை நடைபெறவேண்டும் என்ற பிரேரணையை திரு எஸ். நாகராசா கொண்டு வந்தார்

இத்தீர்மானம் பற்றி உதவி மேயர் திரு ஏ. துரைராஜசிங்கம் பேசியதாவது: தொழிலாளரில் மட்டும் குற்றம் இருக்கவில்லை. இருபகுதியிலும் குற்றம் உண்டு. பொதுமக்களில் சிலர் சொந்த மூளையை பாவிப்பதில்லை. நல்ல வெறியில் சென்று அடிக்கடி பஸ் ஊழியர்களுக்கு தொந்தரவு கொடுப்பார்கள் மக்களுக்காக, தொழிலாளர் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். ஒரு நாளைக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களை பஸ்ஸில் ஏற்றி இறக்குகிறார்கள். ஆதலால் தொழிலாளரை மட்டும் குறை சொல்வதில் அர்த்தமில்லை அப்படி குறைசொல்லி, விசாரணை நடத்தினால், இங்குள்ள தமிழ் தொழிலாளர்களை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். இதனை விரும்புகிறீர்களா? நூற்றுக்கு நூறு விதம் தொழிலாளர் பிழை செய்தார்கள் என்று கூறமுடியாது

கே எஸ். நடராசா: இரவு வேளையில் பொது மக்களை நடுத்தெருவில் நிற்கவிட்டு, பஸ் ஊழியர் வேலை நிறுத்தம் செய்தது முட்டாள்தனமானது. அங்கு நின்று ஆயிரக்கணக்கான பொது மக்களை, அவர்களின் வீடுகளில் சேர்த்துவிட்டு, அடுத்த நாள் வேலை நிறுத்தம் செய்திருக்கலாம். அதுதான் முறையாகும். பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டும்.

திருமதி அந்தோணியார் சுவாமிநாதர்: பகிரங்க விசாரணை அவசியமாகும். யூனிபோம் அணிந்தவர்களில் ஒருவர் தாக்கப்பட்டால் கூட்டாக சேர்ந்து தாக்குவது வழக்கமாகி விட்டது. பொலிஸ் இராணுவத்திலிருந்த இந்த வழக்கம், இப்போது பஸ் ஊழியர் மத்தியிலும் பரவிவிட்டது. யூனிபோம் அணிந்ததும், தங்களை பெரிதாக எண்ணிக் கொள்கிருர்கள்.

ஜனுப் எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர்: இத் தீர்மானத்தை வரவேற்கிறேன் பகிரங்க விசாரணை அவசியம்.

மேயர்: இவ் விஷயமாக சையை காட்டுகிருர்கள். அன்று நடந்த விஷயத்திற்கு பஸ் காரியாலய உத்தியோகத்தர்கள் எல்லோரும் தான் பொறுப்பு.

அன்று 6000 மக்கள்வரை காத்து நின்றதாகவும் அவர்களில் சுமார் 2000 பேர்கள் பெண்களென்றும், சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார். மந்திரியும், தலைவரும் தங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் மக்களுடன் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளக் கூடாது வட பகுதியில் பஸ் சேவை வரவர சீர்கேடு அடைந்து கொண்டுபோகிறது. இங்கு 6 அல்லது 7 வருடம் கடமையாற்றிய பஸ் ஊழியர் ஒருவரும் இருக்கக் கூடாது. இந்த சம்பவத்தை யிட்டு பகிரங்க விசாரணை நடத்தவேண்டும்.

என். ரி. செல்லத்துரை. பஸ் ஊழியர் மட்டுமல்ல பொலிஸாரும் இதற்கு குற்றவாளிகள் எத்தனையோமுறை பொலிஸாருக்கு அறிவித்தும், அவர்கள் அங்குவரவில்லை. பொலிஸார் மீதும் நம்பிக்கையில்லை.

மேயர். பொலிஸார்பற்றி யாருமே புகார் செய்யவில்லையே.

இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

ஜனுப் எ. ஜி பஷீர் யாழ்ப்பாணம்வாழும் முஸ்லிம்களுக்கு, வீடமைப்புதிட்டம்ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி, வீடமைப்பு நிர்மான அமைச்சரைக்கோரும் பிரேரணை ஒன்றை கொண்டுவந்தபோது நீண்டநேரம் விவாதம் நடைபெற்றது.

அப்பிரேரணையில் கூறப்பட்டிருந்ததாவது: யாழ்ப்பாணம் வாழும் முஸ்லிம்கள் இடநெருக்கடி கஷ்டத்தினுலும், வீடில்லா கஷ்டத்தினுலும் அவதியுற்று அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் இவ்விதம் கஷ்டப்படுகிறவர்களுக்கு பொம்மைவெளிப் பகுதிகளில் காணிகொடுப்பதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் நடத்தவண்ணம் இருக்கிறது. பொம்மை வெளிப் பகுதியிலும், பறைச்சேரிப் பகுதியிலும், உடனடியாக வாழக்கூடிய வகையில், வீடமைப்புத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி வீடமைப்பு நிர்மான அமைச்சரைக் கேட்டுக்கொள்வது என இச் சபை தீர்மானிக்கிறது.

எஸ். நாகராசா. வீடமைப்புத்திட்டம் அமைக்கும்போது சமூகப் பிரச்னை இல்லாத வகையில் அமைக்கப்படவேண்டும் உண்மையில் வீடில்லாத கஷ்டம் எல்லாருக்கும் இருக்கிறது ஆத

வீடமைப்பு திட்டம் அமைக்க நடவடிக்கை எடுத்தார் அவரின் ஏற்பாட்டின்படி 8 ஏக்கர் முஸ்லிம்களுக்கும், 4 ஏக்கர் நாவாந்துறை மக்களுக்கும் வழங்கப்படவிருந்தது அதன்படியே செய்ய வேண்டும்.

ஏ துரைராஜசிங்கம்: ஜி ஜி.யின் ஏற்பாட்டின்படி செய்யட்டும்.

எஸ் நாகராசா: என்ன மாதிரி குடியேற்றப்பட வேண்டும் என்பதுபற்றியும், வீட்டுப்பிரச்னை நிலப்பிரச்னை பற்றியும், ஆராய ஒரு குழு வைத்தெரிவுசெய்வோம்.

பஷீர்: முஸ்லிம்மக்களுக்கு காணி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது ஆதலால் இத்தீர்மானத்தை நிறைவேற்றுவோம் பின் பொதுவாக யாழ்ப்பாணத்தில் நிலவும் வீடில்லாப் பிரச்னைக்கு ஒரு குழுவை தெரிவுசெய்யலாம் பொம்மைவெளி பறைச்சேரி பகுதிகள் எனது வட்டாரத்திற்குள் தான் இருக்கின்றன மார்ட்டின் கமிஷன் அப்படித்தான் சிபார்சுசெய்தது நான் கமிஷன் முன்விளக்கிக் கூறியிருக்கிறேன்.

ஏ துரைராஜசிங்கம் இங்குள்ள இரு பெரும் முஸ்லிம் மக்களுக்கு செய்ததிலும் பார்க்க, நாம் கூடச்செய்திருக்கிறோம் அவர்கள் இருவரும் தனித்துநின்று எதையும் செய்துவிடமுடியாதுஎங்களின் ஒத்துழைப்புடன் தான் எவ்வளவோ காரியம் செய்தார்கள்.

மேயர். அவர்கள் தமிழர் தான் சமயத்தால் முஸ்லிம்.

ஏ துரைராஜசிங்கம்: இங்கு முஸ்லிம்என்றபிரச்னை இருக்கக்கூடாதுசோஷலிசம் பற்றி வானளாவப் பேசுகிறவர்கள் எதற்காக யாழ் மக்களைப்பிரித்து செயலாற்ற வேண்டும் நாங்கள் யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதிகள் ஆதலால் யாழ்ப்பாண மக்களுக்காக பாடுபடவேண்டும்.

பஷீர்: நான் முஸ்லிம் மக்களின் பிரதிநிதி.

ஏ. துரைராஜசிங்கம்: தமிழரின் வோட்டு கிடைக்கவில்லையா நீர் அவ்வட்டார பிரதிநிதி.

மேயர்: எல்லாரும் தமிழர் தான்

பஷீர்: இனம் தமிழ்; மதம் முஸ்லிம் ஆனல் முஸ்லிம் மக்கள் குடிபெயர்ந்து வேறு இடத்தில் வாழமாட்டார்கள்

ஏ துரைராஜசிங்கம்: அப்படியானுல் இங்குள்ள முஸ்லிம்கள் குடிபெயர்ந்து பூநரியில் எப்படி வாழ்கிறார்கள்

பஸர்: சுகாதார காரணத்திற்காக இப்பகுதியில்தான் முஸ்லிம்கள் வாழவேண்டும்


ஏ. துரைராஜசிங்கம் சுகா

தலைமை தாங்கட்டும். ஒரு மாதத்தில் அறிக்கை தயாரிக்கட்டும்.

தம்பு கந்தையா: இப்படியான விஷயத்தில் அபிப்பிராய பேதப்பட்டால் இச் சபை மீண்டும் கலைக்கப்பட வேண்டிவரும்.

எஸ். நாகராசா: இதனை காணிப்பிரச்னை, வீடில்லாப்பிச்னைபற்றி ஒரு குழு நியமிக்கவேண்டும் என்ற தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டது. 9 பேர் ஆதரவாகவும், 5 பேர் எதிராகவும் வாக்களித்தனர். குழு ஒன்று நியமிப்பதென முடிவுசெய்யப்பட்டது.

# ரமழான் தூரலொலி



''அல்லாஹ் பூமியை படைத்தபொழுது அது ஆடி அசைய ஆரம்பித்தது. எனவே (அல்லாஹ்) மலைகளைப்படைத்து அவற்றை பூமியில் அமைத்தான். எனவே பூமி ஆடி அசைவதிலிருந்து அமைதியுற்றது. இதை கண்ணுற்ற மலக்கு (அமரர்) கள் மலைகளின் கனதியிலிருந்து ஆச்சரியம் மிக்கவர்களாய் ''இறைவா! உனது படைப்புகளுள் இதைவிட கனதியுடைவது ஏதுமுளதோ'' எனக்கேட்க ஆம் இரும்பு இதைவிட கனதியுடையது என்று இறைவன் சொன்னுன். இறைவா! இரும்பைவிட கனதியுள்ளது உன்படைப்பினுள்ளுண்டோ எனக்கேட்க ஆம் நெருப்பு என்ருன். இறைவா! நெருப்பை விட கனதியுள்ளது உன் படைப்பினுள்ளுண்டோ எனக்கேட்க ஆம் நீர் என்ருன். இறைவா நீரைவிட கனதியுள்ளது உன் படைப்பினுள்ளுண்டோ எனக்கேட்க ஆம் காற்று என்ருன். இறைவா! காற்றைவிட கனதியுள்ளது உன் படைப்பினுள்ளுண்டோ என மலக்குகள் கேட்க ஆம் ஆதமின் மகன் (மனிதன்) தன் இடது கரத்திற்குத் தெரியாதவாறு மறைவாக தன்வலது கரத்தால் கொடுக்கும் இரகசியக்கொடை என்று இறைவன் கூறினுன்'' (நபிமொழி: கூறுபவர்: அனஸ் (றழி) ஆதாரம்: திருமிதி)

தர்மப் பாதையில் தங்களின் சொத்து செல்வங்களிலிருந்து செலவுசெய்வோர் மனிதரிடை இல்லாமலில்லை, ஆனல் அவர்களில் சிலரின் உள்ளக்கிடக்கையை உற்றுநோக்கின் இறைவனுக்காக என்ற உன்னத எண்ணமுடையோராயுள்ளனர். ஏனையோர் பேருக்கும், புகளுக்கும், தன்னை மக்கள் பரோபகாரி எனப் பாராட்டல் வேண்டும் என்பதற்குமேயல்லாது இறைவனுக்காக தர்மம் புரிந்ததாகத் தெரியவில்லை. பின்னவர்களின் தர்மத்தைவிட முன்னவர்களின் தர்மமே மிகப்பலம் வாய்ந்தது. வறுமையால் வதங்கும் ஓர் ஏழையின் அனல்மூச்சை அகற்றவும், துன்பக் கண்ணீரைத்துடைக்கவும் தனமுள்ள ஒருவன் தானகவே சென்று பிறரறியாவண்ணம் ஈகை புரிவதனுல், அவ்வேளை மனிதன் ஈகை பெற்றவன் என்ற ஏனையோரின் ஏழனப் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டு அபகீர்த்தி ஏற்படாவண்ணம் அவனது மானம் காக்கப்படுகின்றதல்லவா? மாற்ருனின் மானம் காக்கப்படும் வகையில் கொடுக்கப்படும் இக்கொடை பலம் பொருந்தியதல்லாமல் வேறு என்ன?

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள் :-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-41 | 6-01 | 12-20 | 3-19 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org